# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி


ஆவணி மாத வெளியீடு (Aug-Sept 2013)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114


## இன்றைய நிலையில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அவசியம்.

காணிக்கை ரூ.5/-

# இந்து மறுமலர்ச்சி இயக்கம் எதற்காக?

"... இந்தியாவுக்கு வந்திருக்கும் கிறித்தவம், முகம்மதியம் எனும் இருபெரும் சமயங்களும் சித்தர்நெறி (இந்துமதம்) எனும் மழையால் பிறந்த ஆறுகளே! இவை சித்தர்நெறி வாழும், ஆளும் இந்திய மக்களுக்குப் புதியவையல்ல, மாறானவையல்ல, வேறானவையல்ல. இப்பேருண்மையினைப் புரிந்தும்; பிறமணர்கள் இவற்றோடு சண்டை, சச்சரவு, போட்டி, போர், ... முதலியவைகளை வளர்த்தே வருகின்றனர். இதனால், இவர்கள் தங்களுக்கென ஓர் உயர்ந்த தலைமைப் பீடத்தைக் கருவாக்கிக் காத்து வளர்க்கிறார்கள். இது தவறு, கண்டிக்கத் தக்கது. பிறமணர்கள் திருந்த வேண்டும். அப்பொழுதுதான் கிறித்தவமும் முகம்மதியமும் இந்தியம் எனப்படும் சித்தர்நெறியில் [இன்றைய இந்துமதம்] இரண்டறக் கலந்து விடும். இதற்காகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்படுகிறது. இது, பிறமணரை எதிர்க்கவோ, அழிக்கவோ ஏற்படுத்தப்படவில்லை. ..."

---

# உள்ளுறை


1. **இ.ம.இ.யின் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்.**
2. **இ.ம.இ. பிறந்த நாள் செய்தி.**
3. **இந்துமத எழுச்சி வாசகம்.**
4. **குருதேவர் தமது 49வது பிறந்த நாளில் சித்தரடியான் திரு இரவிமணிக்கு விடுத்த மடல்.**
5. **புரிந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள் (இ.ம.இ. வீரர் சிந்தனைக்கு).**
6. **குருதேவர் இளங் கவிஞருக்கு எழுதிய அறிவுரைக் கவிதை.**
7. **இந்து மதத்தைப் பற்றிய பேருண்மைகளில் சில.**


— — — — — — — — — — — —

# இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்.

1. **சங்கத்தின் பெயர்:** இந்து மறுமலர்ச்சி இயக்கம்

2. **நோக்கங்கள்:**

a) இந்துக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி ஒற்றுமை ஏற்படுத்தல்.

b) இந்து சமய மறுமலர்ச்சி, இந்திய சமுதாய எழுச்சி, உலக அரசியல் எழுச்சி இவைகளைப் பயன்படுத்திப் படிப்படியாக உயர்ச்சிமிக்க சமுதாயம் காணல்.

c) கலை, மருத்துவம், தெய்வீகம், இலக்கியம், மொழி ஆகிய இவைகளை அறிவியலாக்கிடப் பகுத்தறிவின் துணை கொண்டு பரப்புதல்.

d) உலகின் அனைத்து நாகரீகங்களுக்கும், சமயங்களுக்கும், மொழிகளுக்கும் தாயகமாகக் கருதப்படும் (தமிழகத்தின்) சித்தர் நெறியை மீண்டும் தமிழக-இந்திய-உலக எல்லைக்குள் மலர வைத்தல்.

e) தேங்கிக் கலங்கிச் சோம்பித் தூங்கிக் கிடக்கும் இந்து மக்களிடையே மீண்டும் விழிப்புணர்வூட்டி இந்து சமுதாய அமைப்பு மறுமலர்ச்சி அடையச் செய்தல்.

f) அனைத்து இந்து ஆலயங்களிலும் இந்துமத வழிபாட்டில் புத்துணர்வு காணப் பாடுபடுதல்.

g) இந்தியப் பண்பாட்டை வளப்படுத்துவதும் வளர்ப்பதும்.

h) சித்தர் நெறிப்படி அருளாளர்களுக்கு அருட்பட்டங்கள் வழங்குதல்.

# இந்து மறுமலர்ச்சி இயக்கம் பிறந்த நாள் செய்தி

"சித்தர் நெறி இம்மண்ணுலகுக்கும் முன்பே பிறந்தது. சித்தர்கள் தோன்றித் தோன்றி மறைவார்கள், நிறைவார்கள். அப்போதைக்கப்போது பித்தர்கள், எத்தர்கள் சித்தர் நெறியைச் சிதைக்க முயல்வர். அது அறுவடைக்குப் பின் உழுது விதைப்பது போல் அடுத்தடுத்துத் தோன்றும் சித்தர்களைச் செயல்படச் செய்யும்." - ***குருபாரம்பரிய வாசகம்.***

இதன்படியே யாம் மிகவும் துணிவோடு செயல்படப் புறப்பட்டு விட்டோம். எனவே, "சித்தர் வரும் தருணமிது" என்ற அருளாளர்களின் அறிவிப்பு மெய்யாகிச் "சித்தர்கள் செயல்படும் காலமிது" என்று அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் அறிவிப்புச் செய்யும் நற்காலம் வந்து விட்டது.

"அருளுலக இருள்களையும், அவலங்களையும், மாயங்களையும், கற்பனைகளையும், தவறுகளையும், மடமைகளையும், சுரண்டல்களையும், முதலாளித்துவத்தையும், எதேச்சாதிகாரங்களையும், சர்வாதிகாரங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், வேறுபாடுகளையும், கடுமைகளையும், கொடுமைகளையும் முழுமையாக அகற்றும் மாவீரர்கள் அருளாளர்களாகி அருட்சேனை தயாராகி அருட்போர் ஆரம்பமாகி விட்டது. இதன் வெற்றிக்குப் பின் இம்மாபெரும் படை பொருளுலகக் குறைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், முடக்கங்கள், அடக்குமுறைகள், கேவலங்கள், இல்லாமைகள், இயலாமைகள், பற்றுக்குறைகள், ஊழல்கள், உறிஞ்சல்கள், சூழ்ச்சிகள், சூறைகள், கள்ளச் சந்தைகள், ... முதலிய அனைத்தையும் அகற்றிச் சித்தர்களின் "***சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்***" அமைத்திடும். அதற்காக மிக நெடிய போர் பரவலாக அமைதிவழியில், சமாதான வழியில், அன்பு வழியில், அருள்வழியில், அறவழியில் நிகழும். ஆனால், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து ஊழிப் பெருவெள்ளம் போல் செயல்பட நேரிட்டாலும் நேரிடலாம். அதனைக் கடவுளின் கட்டளையாகவே கருத நேரிடும்.

**- சித்தர் கருவூரூர்**

# "இந்துமத எழுச்சி வாசகம்"

[ஒரு வரி வாசகம்]

**'பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கிய உயரிய உயிர் வாசகங்கள்' என்று சித்தர் ஏளனம்பட்டியார் தொகுத்தவை.**

1) மொழியுரிமைகளைப் பேணுவது இந்துமதமே.

2) இன விடுதலைகளைப் போற்றுவது இந்துமதமே.

3) நாட்டுத் தன்னாட்சிகளைக் காப்பாற்றுவது இந்துமதமே.

4) மொழிச் சமத்துவத்தை வளர்ப்பது இந்துமதமே.

5) இனச் சமத்துவத்தை வளப்படுத்துவது இந்துமதமே.

6) நாட்டுச் சமத்துவத்தை வலிமையாக்குவது இந்துமதமே.

7) சமுதாயச் சமத்துவத்தை அடிப்படையாக உடையது இந்துமதமே.

8) சமுதாயப் பொதுவுடமையை நியாயப்படுத்துவது இந்துமதமே.

9) சமுதாயக் கூட்டுடமையை நீதியாக்குவது இந்துமதமே.

10) மொழி ஆதிக்கத்தைக் கண்டிப்பது இந்துமதமே.

11) மொழிச் சர்வாதிகாரத்தை ஒழிக்கக் கூறுவது இந்துமதமே.

12) மொழி எதேச்சாதிகாரத்தை மறுத்தழிக்கச் செய்வது இந்துமதமே.

13) மொழிச் சுரண்டலை வெறுத்தகற்ற ஆணையிடுவது இந்துமதமே.

14) மொழிகளின் செழுச்சியை விழியாகப் போற்றுவது இந்துமதமே.

15) தாய்மொழி காத்தலே இறை வழிபாடென்று கூறுவது இந்துமதமே.

16) தாய்மொழியைச் சிறப்பாகப் பயிலலே பத்தியென்பது இந்துமதமே.

17) தாய்மொழியை வளப்படுத்துவது அறமென்பது இந்துமதமே.

18) தாய்மொழிக்காகப் போராடுவதே தவமென்பது இந்துமதமே.

19) தாய்மொழி வழிப் பூசையே சிறந்த சித்திகளைத் தருமென்பது இந்துமதமே.

20) தாய்மொழியே முன்னோர்களையும் மூத்தோர்களையும் உணர்த்துவதென்பது இந்துமதமே.

21) தாய்மொழியே உய்வுகளை மெய்மைப்படுத்தும் என்பது இந்துமதமே.

22) தாய்மொழியே இனப் பகையொழித்துத் தருமென்பது இந்துமதமே.

23) தாய்மொழியே நாட்டுரிமை பெற்றுத் தருமென்பது இந்துமதமே.

24) தாய்மொழியே நாட்டுப்பற்றை வளப்படுத்துமென்பது இந்துமதமே.

25) தாய்மொழியே சமுதாய ஒற்றுமையை வலிமையாக்குமென்பது இந்துமதமே.

26) தாய்மொழியே மனிதப் பண்பை வளர்க்குமென்பது இந்துமதமே.

27) தாய்மொழியே நெஞ்ச ஈரத்தைக் காக்குமென்பது இந்துமதமே.

28) தாய்மொழியே சிந்தை வீரத்தை வலிமையாக்குமென்பது இந்துமதமே.

29) தாய்மொழியே செயல்தரத்தை வளமாக்குமென்பது இந்துமதமே.

30) தாய்மொழியே இனிமையும் கனிவும் விளைவிக்குமென்பது இந்துமதமே.

31) தாய்மொழியே பணிவும் துணிவும் கிளைக்க வைக்குமென்பது இந்துமதமே.

32) தாய்மொழியே இன உணர்வு தழைக்கச் செய்யுமென்பது இந்துமதமே.

33) தாய்மொழியே இன ஒற்றுமையை வலிமையாக்குமென்பது இந்துமதமே.

34) தாய்மொழியே இனப்பற்றைச் செழித்தோங்கச் செய்யுமென்பது இந்துமதமே.

35) தாய்மொழியே இன உரிமையைப் பேணுமென்பது இந்துமதமே.

36) தாய்மொழியே இன உரிமையைக் காக்குமென்பது இந்துமதமே.

37) தாய்மொழியே இன விடுதலைப் போரை நிகழ்த்துமென்பது இந்துமதமே.

38) தாய்மொழியே இனக் கட்டுப்பாட்டைத் தருமென்பது இந்துமதமே.

39) தாய்மொழியே இனத் தனித்தன்மையைக் காக்குமென்பது இந்துமதமே.

40) தாய்மொழியே இனவிழிச்சி நிலையைப் பேணுமென்பது இந்துமதமே.

41) தாய்மொழியே இனச் செழுச்சியைப் போற்றுமென்பது இந்துமதமே.

42) தாய்மொழியே இன எழுச்சியை வித்திட்டு விளைவிக்குமென்பது இந்துமதமே.

43) தாய்மொழியே நாட்டுணர்வை வடிவப் படுத்துமென்பது இந்துமதமே.

44) தாய்மொழியே நாட்டுப்பற்றைச் செழுமைப்படுத்துமென்பது இந்துமதமே.

45) தாய்மொழியே நாட்டுத் துன்பங்களுக்கு விடிவளிக்குமென்பது இந்துமதமே.

46) தாய்மொழியே நாட்டுத் துரோகிகளுக்கு முடிவளிக்குமென்பது இந்துமதமே.

47) தாய்மொழியே நாட்டு விரோதிகளை அடியோடு அழிக்குமென்பது இந்துமதமே.

48) தாய்மொழியே சமுதாயச் சமத்துவம் காக்குமென்பது இந்துமதமே.

49) தாய்மொழியே அரசியல் பொதுவுடமையை உருவாக்குமென்பது இந்துமதமே.

50) தாய்மொழியே சமய ஒற்றுமையை விளைவிக்குமென்பது இந்துமதமே.

51) தாய்மொழியே ஆன்ம நேய ஒருமைப்பாடு நல்குமென்பது இந்துமதமே.

52) தாய்மொழியே அரிய ஆன்மீக இன்பம் நல்குமென்பது இந்துமதமே.

53) தாய்மொழியே கூரிய அறிவை வளர்க்குமென்பது இந்துமதமே.

54) தாய்மொழியே சீரிய நோக்கைப் பேணுமென்பது இந்துமதமே.

55) தாய்மொழியே பெரிய போக்கைக் காக்குமென்பது இந்துமதமே.

56) தாய்மொழியே நேரிய பண்பை நல்குமென்பது இந்துமதமே.

57) தாய்மொழி வழிக் கல்வியே உண்மை அறிவு தருமென்பது

இந்துமதமே.

58) தாய்மொழிப் புறக்கணிப்புத் தற்கொலைக்குச் சமமென்பது இந்துமதமே.

59) தாய்மொழித் தாழ்ச்சி இன வீழ்ச்சியென்பது இந்துமதமே.

... என்பன போன்ற ஒருவரி வாசகங்களை எண்ணற்று ஓலைகளில் எழுதிப் பொதுமக்களிடம் கொடுத்துப் படிக்கச் செய்துதான் **'அருட்பேரரசு'** அமைத்தார் குருமகாசன்னிதானம் காவிரியாற்றங்கரைக் கருவூரர். இவர், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகச் செயலாற்றத் துவங்கிய போது தமிழர்கள் பாலிமொழி, பிராகிருத மொழி, சமசுக்கிருத மொழி ... எனப் பிறமொழிக்கு அடிமையாகிக் கிடந்தனர். தமிழர்கள் தாய்மொழிப் பற்றில்லாமல் தமிழ்த் துரோகிகளாகவும், விரோதிகளாகவும், மறுப்பாளர்களாகவும், வெறுப்பாளர்களாகவும், தமிழ்ப் பகைவர்களாகவும், பிறமொழி அடிமைகளாகவும், பிறமொழிக்காரர்களின் கூலிகளாகவும், பிறமொழிக்காரர்களின் கங்காணிகளாகவும் ... செயல்பட்டிட்டார்கள். அப்படிப்பட்ட இழிநிலைகளை, பழிநிலைகளை, அழிநிலைகளை எல்லாம் தாய்மொழிப் பற்றும், பாசமும், அன்பும், ஆர்வமும், ஈடுபாடும், நாட்டமும் தமிழர்களுக்கு ஊற்றெடுக்குமாறு செய்துதான் மாற்றியமைத்தார் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர். **இவர் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் இன்னும் நிற்கிறது**. ***ஆனால், இவர் தமிழர்களுக்கு ஊட்டிய தாய்மொழிப் பற்றும், தன்மானப் பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றும் ... தரைமட்டமாகி விட்டன.*** தமிழன், தாய்மொழியை அடகு வைத்தும், காட்டிக் கொடுத்தும், கூட்டிக் கொடுத்தும், அடிமைப் படுத்தியும் ... தன்னலம் கொண்டு வாழும் பேராசை வெறிபிடித்த வாழ்க்கையை யாரால் திருத்த முடியும் இனி?!?!?!?!?!?

தமிழனுக்குப் பகைவன் தமிழ்மொழி விரோதியாகவும், துரோகியாகவும் வாழும் தமிழ்மொழிப் பற்றில்லா ஈனப்பிறவிதான். "தகப்பன் பெயர் தெரியாமல் வாழ்பவனை விடத் தாய்மொழிப் பற்றில்லாமல் வாழ்பவன் தான் இழிந்தவன், அவமானத்துக்குரியவன்".

அரசியலில் அன்னியருக்குக் கங்காணியாய், எடுபிடியாய், கூலியாய், அடிமையாக வாழும் மானங்கெட்ட தமிழர்கள் பேராசை கொண்டு நாயாய் அலேகிருர்கள். இவர்கள் பதவி, பணம், புகழ் ஈட்ட எந்தத் துரோகத்தையும் செய்யத் தயாராக இருக்கிருர்கள். இவர்கள், தாயையே விலேக்கு விற்கும் கயவர்களே விடக் கொடியவர்கள், கேடுகெட்டவர்கள், அற்பர்கள். இவர்கள் தங்களுக்குப் பதவி, பணம், புகழ் கிடைப்பதற்காகத் தாய்மொழிப் பற்றை விற்று விட்டுத் தாய்நாட்டை அடிமைப்படுத்திடக் கங்காணி வேலே செய்யும் குடிகேடர்கள்! இவர்களே இந்துமதத்தால்தான் திருத்தி நல்வழிப் படுத்த முடியும். அண்டபேரண்டங்களேயும் பிண்டங்களேயும் அடக்கியாளும் அமுதத் தெய்வத் தமிழுக்குத் துரோகிகளும், விரோதிகளும் தமிழர்களிலேயே தோன்ருமல் தடுக்கும் ஆற்றல் இந்துமதத்துக்குத்தான் உண்டு. ஏனெனில், பதினெண்சித்தர்கள் இந்துமதத்தைத் தமிழ்மொழியில்தான் வெளியிட்டுள்ளார்கள். இந்துமதத்தைத் தமிழர்கள் தெரிந்தும், புரிந்தும், தெளிந்தும், உணர்ந்தும், உண்மையான இந்துவாக வாழ்ந்து அருளே அநுபவப் பொருளாகப் பெற்ற பிறகுதான் தமிழின் அருமை பெருமைகளே உணருவார்கள். அதற்காகவே, **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத்** தோற்றுவிக்கிறேன் நான். பதினெண்சித்தர் பீடாதிபதியாக இல்லாவிட்டாலும், பத்தாவது பதிஞேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளேப் போல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறேன் நான். ஏனெனில், இந்துமதம் மறுமலர்ச்சி அடைந்தால்தான் தமிழ்மொழி செழுச்சியடையும், ஆட்சியுரிமை பெறும், தமிழினம் விடுதலே பெறும், தமிழர்கள் தன்மானத்தோடும் ஒற்றுமையோடும் வாழுவார்கள். தமிழர்களேத் தாய்மொழிப் பற்றும், பாசமும், நம்பிக்கையும் உள்ளவர்களாக்கித் தமிழின விடுதலேயை விளேவிக்கவே **இ.ம.இ.**யைத் தோற்றுவிக்கிறேன் நான்.

**- கண்டப்பக்கோட்டைச் சித்தர் கருவூரூர் உ. இராமசாமிப் பிள்ளே**
கி.பி.1772

இக்குறிப்பு இ.ம.இ.யின் இரண்டாவது தலேவர் காக்காவழியன் பண்ணேயாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப்பட்டது.

**ஆதாரம்:-**

இந்துமதத் தந்தை

குருமகாசன்னிதானம்

ஞாலகுரு சித்தர் கருவூரூர்

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

இ.ம.இ.யின் மூன்ருவது பாரம்பரியத் தலைவர்.

**நகல் எடுத்தவர்:-**

தலைமைப் பணியாளர்

அருளாட்சி சிவசத்திகள் சன்னிதானம்,

சித்தர் மகன், சித்தரடியார் தெய்வீகாச்சாரியார், சோ.இரவீந்திரன்
29/4/84

***//உண்மை நகல்//***

***//இதன் மூலம்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//***



**மெய்ஞ்ஞானக்கொடி**

# குருதேவர் தமது 49வது பிறந்த நாளில் சித்தரடியான் கு.இரவிமணிக்கு விடுத்த மடல்.

*நிலவறைக் கருவூலமே யாம்.*
*பூதம் காக்கும் புதையலாகுமோ எம் சாதனைகள்.*
*நீள நினைத்து ஆழப் பெருமூச்சு விடுவதே எம் வாழ்வுக் கோலம்.*
*அரியணையேறக் காலம் எப்போது வரும்?*
*உண்மை பெரிய அளவில் வெளிப்படச் சூழலே வரவில்லை.*
*நன்மை வரும் முன் தீதும் பகையும் விழுங்குமோ?*
*தன்னம்பிக்கை, இன, மொழி, நாட்டுப் பற்றில்லாதத் தாயகத்தில் என் நம்பிக்கையே வரலாறு. தத்துவம், கலை, அறிவியல் காப்பதே.*
*சொல்ல செய்யப் புறப்பட்டு ஆண்டுகள் பலவாகின்றன.*
*நிலையான உலைக்கலமாகக் கலைக்கூடமோ, பாசறையோ இல்லை.*
*நானுருவாக்கிய மக்களே சேவுகனாய், இரவிமணியாய், குமாராய், இரவீந்திரனாய், சத்தியமூர்த்தியாய், சத்திவேலாய், பொன்னுசாமியாய், சண்முகானந்தமாய், சுந்தரராமனாய், சௌந்தரராசனாய், நந்தகுமாராய், முத்தையாவாய், செந்தில்ராசாய், சண்முகமாய், சுப்பிரமணியாய், சுப்பையாவாய் ... ... எண்ணற்று வளருவதே நிறைவை, அமைதியை, நம்பிக்கையை, ஆர்வத்தை ... வழங்கி அல்லும் பகலும் அயராதுழைக்கச் செய்கின்றன.*

என்ற முன்னுரை வரிகளோடு அருமை உரிமைச் செல்வன் கு.இரவிமணி B.E., [K.Ravimani B.Sc., B.Tech., Walchand Nagar Ind. Ltd. P.O. Box No.17, Hetanda, Nepal] அவர்களுக்கு அவரது ஏற்புத் தந்தை தமது 49வது பிறந்த நாளில் 6-10-1984இல் *(இது 6.10.84 முதல் 10.10.84 முடிய ஐந்து நாட்கள் மண்ணும் விண்ணும் அண்டபேரண்டங்களும் கொண்டாடப்படும்)* வரையும் மடல்!

அன்பு மகனே! நான் கோழையில்லை. ஆனால், ‘அவையறிந்து பேச வேண்டும்’, ‘பருவத்தில் பயிர் செய்ய வேண்டும்’, ‘இடம் பொருள் ஏவல் சூழல் வசதி யுணர்ந்து வினையாற்றல் வேண்டும்’, ‘தன் வலியும், மாற்றான் வலியும் நோக்கிப் போருக்கு எழல் வேண்டும்’ ... என்ற மூதுரைகளைத் துணையாகக் கொண்டே ஊமையாக, ஆமையாக, கருவறை மூலவராக இருக்கிறேன் நான். இந்தியத் துணைக் கண்டம் முழுதும் உள்ள மக்களை நோய், பேய், வறுமை, ஏற்றத்தாழ்வு, சாதிவெறி, மதவெறி, பணவெறி, பதவிவெறி, சர்வாதிகார வெறி, எதேச்சாதிகார வெறி, சுரண்டல், ஏமாற்று, கள்ளச் சந்தை, ஊழல், மடமை ... முதலிய அனைத்திலிருந்தும் காப்பாற்றிச் ***சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாய வாழ்வு*** *வாழுமாறு செய்ய வேண்டியதே உடனடித் தேவை. இத் தேவையை எந்த ஒரு தனித் தலைவனாலும் செய்ய முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது. ஒரு மாபெரும் பழம்பெரும் அநுபவப் பூர்வமான இத் திருநாட்டின் பண்பாட்டிலேயே பிறந்த, செயலுக்கு எளிமையான தத்துவத்தால்தான் இத் திருநாட்டை எல்லா இழிவுகளிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் நலிவுகளிலிருந்தும் குறைகளிலிருந்தும் காப்பாற்றிப் புத்துணர்வும், மறுமலர்ச்சியும் பெற்ற செழிச்சியை அடையச் செய்ய முடியும்! முடியும்! முடியும்! அத் தத்துவம்தான் சித்தர்நெறி எனும் இந்து சமயம். இந்த ‘இந்து’ என்ற சொல் சித்தர்களின் மரபுப்படி (48) நாற்பத்தெட்டுச் சொற்களாக பொருள் விளக்கம் தரப்பட்டது ஆதியில். ஆனால், காலப்போக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட சொற்களால் இதன் பொருள் விளக்கப்படும் அளவுக்கு சித்தர்நெறித் தத்துவம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்திருக்கிறது.*

எனதரிய செல்வனே! இந்தியத் துணைக்கண்டத்தைக் காப்பாற்றுவது இதனுடைய பூர்வீகக் குடிகளான தமிழர்களின் [The Tamils are the aboriginates of the India] கையில்தான் இருக்கிறது. விந்திய மலைக்குத் தெற்கே உள்ள இந்தியாவும், இந்துமாக் கடலும், ஆப்பிரிக்க, அமெரிக்கக்

கடற்கரை எல்லைகளை ஓரளவும் தொட்டும் ஒரு பெரிய நிலப்பரப்பு 'இளமுறியாக் கண்டம்' [இளமை மாறுத Loose Soil - The Lemuria] என்ற பெயரில் இருந்தது. அம் மக்கள் நன்கு வளர்ந்து முதிர்ந்த நாகரிகம் பெற்றுப் பெண்மையின் முதிர்ச்சிப் பக்குவச் சொல்லால் குமரிநிலை பெற்றனர். அதனால், அந் நிலப்பரப்பு முதிராத மண்ணையுடைய இளமுறியாக் கண்டம் 'குமரிக் கண்டம்' என்ற சிறப்பைப் பெற்றது. இதேபோல் இக் கண்டத்துக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட அண்டபேரண்டத்து மொழியான, பதினெண்சித்தர்களின் தாய்மொழியான குமரிநிலை மாறுத கன்னித்தமிழ் தனது வளமிகு வாழ்வால் 'பைந்தமிழ்', 'செந்தமிழ்', 'வண்டமிழ்' ... என்று (48) நாற்பத்தெட்டுச் சொற்களால் போற்றிப் புகழ்ந்து பொருள்கூறிப் பாராட்டப் பட்டே வளர்க்கப் பட்டு வருகிறது. காலப்போக்கில் இத் தெய்வத்தமிழைப் புகழ்ந்து பொருள் விளக்கம் கூறும் சொற்கள் நூற்றுக்கணக்கில் பெருகி விட்டன.

பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியின் ஒலி அலைகளால்தான் விண்ணையும், மண்ணையும் இணைத்தனர். இம் முயற்சியின் வடிவமாக, உள்ளீடாக, உயிராக இருப்பதுதான் 'இந்து சமயம்', 'இந்துமதம்' ... எனப்படும் சித்தர்நெறி. இந்துமதமெனும் சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய வாழ்வியல் தத்துவம்தான் உலகம் முழுவதும் வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டு முறைகளையும், வாழ்வியல் நெறிகளையும் தோற்றுவித்தது. ஆனால், தனிமனித உணர்வுகளும், அநுபவங்களும் பல்வேறு மதங்களை உண்டாக்கி மானுடரைத் தொல்லைகளுக்குள்ளாக்கி விட்டன.

எல்லையற்ற பேரார்வத்தால் என்னுள் நின்று சாதனைகளின் சான்றாக வாழும் உரிமை மகனே! தனிமனிதர்களின் அகம்பாவம், ஆணவம், மாயை, பேராசை, வெறி, தன்னலம், ... முதலியவைகள் அடங்கி ஒடுங்கவும், அகழ்ந்தெடுத்தெறியப் படவும் வேண்டுமானால் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவு ஊர், கிராமம், குக்கிராமம் ... என்று எங்கும் சில சித்தர்நெறிச் செல்வர்கள் உருவாகிச் செயல்படும் பொற்காலம் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் தனிமனிதர்கள் சர்வாதிகாரிகளாக,

முதலாளிகளாக, போலித் தலைவர்களாக, ஏமாற்றும் மதவாதிகளாக, சுரண்டும் கலைஞர்களாக, கொள்ளை லாபம் அடிக்கும் வணிகர்களாக ... உருவாவது தடுக்கப்படும்! தடுக்கப்படும்! தடுக்கப்படும்! அல்லது மேற்படி நபர்கள் ஒடுக்கப்படுவார்கள். இதற்காகக் குடும்பத்துக்கு ஓர் ஆணோ, பெண்ணோ குறிப்பிட்ட, குறிப்பிட்டக் காலம் இந்து மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சிக்காக முழுநேர ஊழியராக உழைக்க முன்வர வேண்டும். அதன்பிறகே தமிழ்மொழி, இன, கலை, பண்பாட்டு விடுதலைகள் விளையும். தமிழின ஒற்றுமையே தன்னம்பிக்கை நல்கும், இனமானம் காக்கும், இந்துமதத்தை அரியணையில் அமர்த்தும்.

நமது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் பட்டிதொட்டிகள், கிராமங்கள், ஊர்கள், ... என்று சுற்றுப்பயணம் செய்து அருளை அனுபவப் பொருளாக வழங்கி அருட்படை திரட்ட வேண்டும். கருவறை மூலவர்களையும், ஒன்பதுவகைக் காடுகளில் உள்ள அருவ, உருவ, அருவுருவங்களையும் புத்துயிர்ப்புச் செய்து, அருளாட்சிப் பணிகளில் உரிய பங்கு பெறச் செய்ய வேண்டும். நம் மக்கள் தாங்கள் எதற்காக? ஏன்? எப்படியெப்படிப் போராட வேண்டும் என்பதைப் புரியுமாறு செய்ய வேண்டும். தத்துவத்தால் ‘எண்ணப் புரட்சி’, ‘கருத்துப் புரட்சி’, ‘பண்பாட்டுப் புரட்சி’ ... மலர்ந்தால்தான் முழுமைப் புரட்சி கிடைக்கும். குருதேவர் கட்டளைப்படி குருக்கள்களும், குருமார்களும் குருபாணியைக் கையாள வேண்டும். இதற்காகத் தங்களால் இயன்ற உதவிகளை அனுப்புங்கள்! உலகத் தமிழர்களை ஒன்று திரட்டுங்கள்.

அன்பு

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

6/10/84

நகல் எடுத்தது: சித்தரடியான் S.இரகுநாதன்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் இரகுநாதன் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# புரிந்து கொள்ள வேண்டிய சிந்தனைகள்

## [இந்து மறுமலர்ச்சி இயக்க வீரர் சிந்தனைக்கு]

**காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் காக்கையர்**
**ம.பழனிச்சாமி பிள்ளை**

1) எமது மாமனுரும் இ.ம.இ.யின் முதல் தலைவருமான கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமி பிள்ளையிடமிருந்து இ.ம.இ.யின் பொறுப்புக்களை ஏற்றதும்; யாம் இ.ம.இ. வீரர் சிந்தனைக்கு விடுத்த அழைப்பு வேண்டுகோள் மடல்களுள் ஒன்று இது.

2) இ.ம.இ.க்கு இமயம் முதல் குமரி வரை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், முழுநேரச் செயல்வீரர்களும், அ.வி.தி. நிலையங்களும், வழிநடத்தும் அருளாளர்களும் நிறைய இருந்தும் கூட; இந்த இயக்கம் உலகறிய வெளிப்பட்டுச் செயல்படாமல் இலைமறை காயாகவே இருநூறு ஆண்டுகளாக இருந்து வருவது ஏன்? மாற்று மதங்களோடு சண்டைச் சச்சரவோ, போராட்டமோ, போரோ உருவாகி விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த இலைமறை காய்நிலை என்றால்; அனைத்து மதத்தவர்களையும் அருளை அநுபவப் பொருளாக அடையக்கூடிய 'சீவநெறி' எனும் சித்தர்நெறியை எங்கும் வித்திட்டு வளர்த்திடலாமே!?

3) இ.ம.இ.யின் சித்தாந்தம் 'சுரண்டலற்ற', 'சர்வாதிகாரமற்ற', 'ஏழை பணக்காரர் வேறுபாடற்ற', 'ஏற்றத் தாழ்வற்ற', 'அடிமைநிலையற்ற', 'மிடிமை நிலையற்ற', ... சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்பதேயாகும். இதற்காகத்தான் மதங்களுக்கிடையில் மறுப்பு வெறுப்போ, நகைப்புப் பகையோ! போட்டி பொறாமையோ! சண்டைச்

சச்சரவோ! நேரடிப் போரோ! நிகழ்ந்திடாமல் தடுத்து நிறுத்தி 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் பணிதான் இ.ம.இ.யின் செயல்சித்தாந்தமாக ஆக்கப் பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், 'இந்து' என்ற சொல்லால் இந்த இயக்கம் இந்துமதத்திற்கு மட்டுமே உரியதாகத் தவருக எண்ணுபவர் அதிகமாக இருக்கிருர்கள். எனவே, 'இந்து' என்ற சொல்! பொதுவாக 'மதம்', 'சமயம்', 'ஆவி', 'ஆன்மா', 'ஆருயிர்', 'மனிதப்பண்பு', 'மனித வாழ்வு', 'உண்மை', 'அழகு', 'இனிமை', 'அன்பு', 'நட்பு', 'தோழமை', 'பற்று', 'பாசம்', 'அமைதி', 'அடக்கம்', 'கட்டுப்பாடு', 'கடமை', 'கண்ணியம்', 'கூடிவாழல்', 'பிறர்க்குக் கேடு செய்யாமை', ... முதலிய நற்பண்புகளேக் குறிக்கின்றது என்ற பேருண்மையைத் தமிழகத்துக்குள் இருப்பவர்களுக்குக் கட்டாயமாக அறிவித்தும் உணர்த்தியும் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தியத் துணேக் கண்டம் முழுவதும் உணருமாறு செய்யவேண்டும்! உலகம் முழுவதும் அறியுமாறு செய்ய வேண்டும்!

4) 'ஒவ்வொருவரும் தான் வாழ ஒரு தாழ்வாரத்தையாவது (ஒரு வீட்டின் முன் அல்லது பின் பகுதி) சொந்தமாகப் பெற்றிருத்தல் வேண்டும். பிறகுதான், பொதுப்பணியில், அருட்பணியில் ... ஈடுபட வேண்டும்' என்பதுதான் குருபாரம்பரிய வாசகம்.

"தனக்கெனத் தாழ்வாரம் ஒன்றில்லார்க்குத் தேவாரப்பணி
ஏதுக்கடி குதம்பாய்" - (குதம்பேய்ச் சித்தர்)

என்ற குதம்பேய்ச் சித்தர் பாடல் இக் குருபாரம்பரியச் செய்தியினே எளிமையாக விளக்குகின்றது. அதாவது, 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ருல்; 'உலக மதத் துறையின் மறுமலர்ச்சி இயக்கம்' (The International Religious Renaissance Movement) என்றுதான் பொருள் என்பதை அனேவரும் உணருமாறு செய்யவேண்டும். அப்பொழுதுதான், உலக அளவில் மொழி விடுதலே, இன விடுதலே, பண்பாட்டு விடுதலே, நாகரீக விடுதலே, மத விடுதலே, நாட்டு விடுதலே, ... என்பவை எல்லாம் தனித்தன்மையோடும், உரிமையோடும் பேணப்படும். இதன்படியே, முதலில்

தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, ... முதலியவை யெல்லாம் உரிமையோடும், பெருமையோடும் வாழ்வு பெற வேண்டும். அப்பொழுதுதான், இ.ம.இ. உலக அளவில் மனித இனத்துக்கு நன்மை செய்யக்கூடிய ஓர் இயக்கமென்பது உணரப்படும், நம்பப் படும். எனவேதான், தமிழ்நாட்டை, தமிழினத்தை, தமிழ்மொழியை, தமிழர் மதத்தை நாற்றங்காலாகப் பயன்படுத்தி இ.ம.இ.யின் தத்துவ வித்துக்களைத் தயாரிக்கும் விதைப்பண்ணையையும், இ.ம.இ.யின் தத்துவக் கன்றுகளை, இளஞ்செடிகளைத் (Nursery Garden) தயாரிக்கும் நாற்றுப் பண்ணையையும் உருவாக்க வேண்டும். இதற்குரிய செயல்திட்டங்களை உருவாக்குபவர்களாகவே நாமிருக்க வேண்டும். அதாவது, இந்த 'இருபதாம் நூற்றுண்டுச் சிந்தனைகள்' என்று தலைப்பிட்டுப் பட்டியலிட்டுக் காட்டக்கூடிய அளவிற்குப் புதிய புதிய சிந்தனைகளை ஏட்டளவிலாவது உருவாக்கிடும் ஆற்றல் மிக்கவர்களாக வேண்டும் நாம்.

5) நம்மவர்களுக்கிடையிலே பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அடிக்கடி சந்தித்துப் பேசிக் கலந்து முடிவெடுத்துச் செயல்படலும், எக்காரணம் பற்றியும் யாருக்கும் யாரிடத்தும் வெறுப்போ, மறுப்போ, பகையோ, போட்டியோ, பொறுமையோ, ... ஏற்படாமல் விட்டுக்கொடுத்துக் கட்டுப்பாடோடு செயல்படலும், ... வளர வேண்டும்! வாழ வேண்டும்! அப்போதுதான் இதுவரை உருவாகாத சாதனைநிலைகளை யெல்லாம் உருவாக்கிட முடியும்.

6) நம்மவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசி கோயில்களில் சன்னிதான உடையில் ஒருவர் இருவரென்று அடிக்கடி உலா வந்திடல் வேண்டும். அவ்வப்பொழுது ஆர்வத்தோடு உரையாட வருபவர்களிடம் மட்டும் இ.ம.இ.யின் தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும் விளக்கியுரைத்தால் போதும். மிகமிக விரைவில் தமிழகமெங்கும் தேவையான அளவு மக்கள் இ.ம.இ.யை புரிந்து பேராதரவு தர முன் வந்திடுவார்கள். அப்படிப்பட்டவர்களிடம் (சந்தா தொகை) உறுப்பினர் கட்டணம் பெற்று உடனே அவர்களை இ.ம.இ.யின் அதிகாரப்

பூர்வமான அங்கத்தினர்களாக்கிடல் வேண்டும். அத்துடன் அவர்கள் ஒவ்வொருவரும் அன்றாடம் பூசைசெய்து அருளை அநுபவப் பொருளாகப் பெற்று வாழ்ந்திட உரிய பெரிய வழிவகைகளைக் குருதேவர் மூலம் உருவாக்கிடல் வேண்டும். அப்பொழுதுதான் கோயில்களும், சுடுகாடுகளும், சமாதுகளும், மற்றக் கருவறைகளும் புத்துயிர் பெற்று அருட்புரட்சி உருவாகிட உதவிட முடியும்.

7) நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே அன்னியர்களுக்குத் தமிழர்களை அடிமையாக்கும் பணியைத்தான் செய்கின்றன. ஏறத்தாழத் தமிழனைத் தலைவனாகக் கொண்ட கட்சிகளே நம் நாட்டிலில்லை. அதாவது, தமிழக அரசியல்வாதிகள் அன்னியர்களின் கட்சிகளுக்கு கங்காணிகளாக, ஏசண்டுகளாக (Agents), பதிலிகளாக (Representatives), கூலிகளாக (Coolies), அடிமைகளாக (Slaves) மாறுபவர்களாகவும், பிறரை மாற்றுபவர்களாகவும்தான் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் திருந்தவும், இவர்களைத் திருத்தவும் மெய்யான இந்துமத வரலாறுகளையும், இலக்கியங்களையும் நூல்களாக அச்சிட்டு வழங்குவதோடு சொற்பொழிவுகளின் மூலம் பரப்பிடல் வேண்டும். *'இப்படிச் செயல்படத் தலைமையிடம் அளப்பரிய பத்தியும், பணிவும், உண்மைப் பாசமும், பற்றுமுள்ள அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! ஆனால், இன்றைய நடப்பில் பொழுதுபோக்குக்காகவும், தங்கள் தங்களின் செல்வாக்குக்காகவும், புகழுக்காகவும் செயல்படுபவர்களே அதிகமாக இ.ம.இ.யில் இருக்கிறார்கள். இதற்குரிய மருத்துவம் துணிச்சலாகச் செய்யப்பட்டேயாக வேண்டும்'.*

8) பிறமண்ணினரான பிருமணர்கள் மிகவும் அடக்கமான அறிவுநுட்பமிக்க அறிவியல் விலங்குகள். **இவர்கள் தாங்கள் தமிழகத்தில் வாழவேண்டுமேயானால், தமிழகத்தில் பல அன்னியர்களும் வாழவேண்டும் என்ற பேருண்மையை நன்குணர்ந்தவர்கள். எனவேதான், இவர்கள் எந்த அன்னியர் தமிழகத்திற்கு வந்தாலும், உடனே அவர்களுடன் இரண்டறக் கலந்து; அவர்களைத் தங்களுக்குத் துணையாக்கிக்**

**கொண்டிடுகிறார்கள். அவர்களுக்கு அனைத்து விதமான அன்பளிப்புக்களையும், இரகசியமாக வழங்கி; அவர்களோடு இணைந்து தமிழர்களைத் தாழ்த்திச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழ்ந்திடுகின்றார்கள்**. இதேபோலத்தான், இவர்கள் தமிழர்களுக்கு மொழிப்பற்றோ, மொழிப்பாசமோ, மொழியார்வமோ, மொழியுரிமையோ, மொழிப்பெருமையோ, மொழியறிவோ, ... நிலையாக ஏற்பட்டு விடாமல் இருக்கத் தங்களின் சமசுக்கிருத மொழியைத் தேவமொழியென்றும், பூசைமொழியென்றும், அருட்சத்தி மொழியென்றும் புகழ்ந்து, புகழ்ந்து திசைதிருப்பல்களை வளர்க்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாகத் **"தங்களின் சமசுக்கிருத மொழியிலிருந்துதான் தமிழ்மொழி தோன்றியது"** என்ற ஒரு மோசடியான கருத்தையும் பரப்பி வருகிறார்கள். **இந்த முயற்சிகள் நிலைத்து நிற்பதற்காகத் தமிழர்களுக்கு ஆங்கில மொழியில் மோகத்தையும்; இந்திமொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும்**; செயற்கை நெருக்கடிகளாகவும், போராட்டப் பிறச்சினைகளாகவும் உருவாக்கி விட்டார்கள். இதனால் தமிழர்கள் தமிழ்மொழியை ஆழமாகக் கற்கவும்; தமிழிலக்கியங்களில் அகன்ற புலமை பெறமுடியாமலும் செய்கிறார்கள். எனவே, பிறமண்ணினரான பிராமணர்களை நேரடிப் போரில் சந்தித்து வெற்றி கண்டால்தான்; தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள அனைத்து வகையான வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும், நலிவுகளையும், மெலிவுகளையும், இழிவுகளையும், அழிவுகளையும், முடக்கங்களையும், மிடிமை நிலைகளையும், அடிமைநிலைகளையும், துரோக நிலைகளையும், விரோத நிலைகளையும் முழுமையாக அகற்ற முடியும்! அகற்ற முடியும்! அகற்ற முடியும்! ... அதாவது கட்டுச்சோற்றில் எலியை உயிரோடு சேர்த்து வைத்தது போல; பிராமணர்கள் தமிழினத்தாரோடு வாழும் வரை தமிழர்கள் உய்வு பெறவே முடியாது! முடியாது! முடியாது! எனவே, இதற்குரிய காரண காரியங்களையும், செயல்நிலைகளையும் ஆராய்ந்தறிந்து விளக்கிடுவதுதான் இ.ம.இ.யின் கடமை. அதாவது, தமிழ்மொழி மட்டுமே சமய, சமுதாய, அரசியல், தொழில், கலை, கல்வி, ... முதலிய அனைத்துத் துறைகளிலும் முழுமையாக ஆட்சி செய்தல் வேண்டும்.

அப்பொழுதுதான் அன்னியர்களின் ஊடுருவல்களையும், அன்னியர்களால் உருவாகும் துரோக விரோதங்களையும் ஒழிக்க முடியும்.

9) எல்லா மொழிகளிலும், தமிழ்மொழியில் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள பூசாமொழிகளையும், விதிகளையும், வாசகங்களையும், அருளூறு செயல்களையும் ஒலிநயம் குன்றுமல் மொழிபெயர்க்க வேண்டும். தமிழ்மொழியின் அருளாற்றலை அனைவரும் அறியச் செய்ய வேண்டும். தமிழகத்துக்குள் அன்னிய மொழிகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழகத்துக்குள் அன்னியர்களே இல்லாத நிலை தானுக உருவாகிடும். இதற்காக அன்னிய மொழியினர் கட்டாயமாகத் தமிழ்மொழி வழியாகத்தான் வாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கியேயாக வேண்டும். அதற்குரிய அரிய பெரிய செயல்நிலைகளே; இ.ம.இ. அங்கத்தினர்களுக்கிடையில் பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், கட்டுப்பாடும், தலைமையை மதித்துச் செயல்படலும் பசுமையாக வளவளர்ச்சி பெற வேண்டும்! பெற வேண்டும்! பெற வேண்டும்! இவற்றையே, யாம் பொறுப்பேற்றதும் எமது கருத்துரையாக வழங்குகிறேம்.

காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர்
காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை
இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர்.

நகல் எடுத்தவர்:

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், அருட்சேனை தளபதி, M.C.இராமன், 248-K, இரயில்வே காலனி, மதுரை-625010, 7.11.86

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் M.C.இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது//**

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

# குருதேவர் இளங் கவிஞருக்கு எழுதிய அறிவுரைக் கவிதை

கவிஞரே! அன்புக் காணிக்கையாக
கலைச்செல்வன் வாயிலாக
கல்லூரிக்கே அனுப்பிய நிகழ்ச்சி
ஆசிரிய வாழ்வில் காவியமே!
சீரிய நினைவாகப் போற்றுகிறேன்.
உரிய பதிலே விரிவாக்கவே
புரிதற்குரியன மடலாகின்றன.
விரிவஞ்சி நேரில் அழைக்கிறோம்.
உணர்ச்சி மழையே கவிதை;
உமது படைப்பிதன் சான்றே!
கருத்தில்லா உணர்ச்சி காட்டாறே;
உமது படைப்பிதன் விளக்கமே!

தலைப்புக்கள் அனைத்தும் காதலியின்
தலைப்பூக்களே! விழிப் பூக்களே!
கலைத் தோட்டத்திலே பயிரான
கவலைப் பூக்களே!
நினைவுப் பூக்களே!
சமுதாயத்தின் தப்புக்களே!
வெறியர்களின் இறுமாப்புக்களே!
மடமையின் மப்புக்களே!
எப்பாடு பட்டாவது
இவ்விழிவு அழிவு போக்கிட
இளஞ் சிங்கமே புறப்படு.

தமிழ்க் கவிஞ ரெல்லாம்
மொழித் தூய்மை பேணுமல்
கூலியாய் கங்காணியாய் சேவகனுய்
அன்னிய மொழிக் கடிமையானதால்
விழியிழந்த மாந்தராய்த் தமிழர்
வெகு காலம் வாழுகிருர்;
*சீச்சீ! சீச்சீ!! சீச்சீ!!!*
போதுமடா இந்தக் குருட்டு நிலே.

விழித்திடடா இளங் கவிஞனே!
புதுக்கவிதை போதுமடா;
மொழித் தூய்மை பேணடா!
இனமானம் காத்திடப் படைதிரட்ட
மொழி யுரிமைக் கவிதை பாடு!
மொழித் தூய்மைக்கு அழைப்பு விடு!
மொழிவழி இன உணர்வு வளர்த்திடு!
மொழிவழி பண்பாடு காத்திடு!
விழியென இன ஒற்றுமை பேணிடு!
நலிந்து மெலிந்து நடைப்பிணமாய்
நாளும் கேவல மடைகிறதே
நாடாண்ட தமிழினம்.
நான் நீயென்று போட்டியிட்டே
நம் தமிழர் அன்னியர்க்கு
அடிமையாய் கூலியாய்
கங்காணியாய் எடுபிடியாய்
குற்றேவல் செய்யும் குற்றமே
நாற்றமடிக்கும் பிணமாக்கிற்று
நற்றமிழர் உரிமைகளே பெருமைகளே.

தூதூ! தூதூ! தூதூவென்று
காறித் துப்பினுலும் மாருர்
தமிழினத் துரோகிகள்!

இவர்களே தமிழின விரோதிகளின்
போர்த் தளவாடங்கள் தளபதிகள்.
மாற்ருர் பணம் பதவி புகழுரை
பெற்ருேரே தமிழின துரோகிகள்.
மாற்றிட வேண்டும் இவர்களை.
மாற்றிய பின்னரே
விரோதிகளை பகைகளை நினைப்போம்
எனத் தமிழ்க் கவிஞர்கள்
தினமும் நினைத்து வாழ்ந்தால்
இனமானம் தழைக்கும்;
மொழியுரிமை பிழைக்கும்;
பண்பாட்டு விடுதலை முளைக்கும்;
இன ஒற்றுமை கிளைக்கும்.

புதுக்கவிதை பாடும் இளைஞனே
வறட்சியும் மிரட்சியும்
வண்டமிழரை விட்டகல
புரட்சிக் கவிதை புனைய வா
தரமான தமிழில் எழுத வா
உரமான சிந்தனை உரைத்திட வா
வீர நெஞ்சம் வளர்த்திட வா
தனித் தமிழ் பேணித்தான்
தமிழன் மானங் காத்திட முடியும்
தமிழின உரிமையும் பெருமையும்
இமிழ்கடல் கடந்தும் பறைசாற்றியே
உலகாண்ட இனத்தின் உரிமைக்கு
இன விடுதலைப் போர் காணமுடியும்
தமிழர்கள் தங்களைத் தமிழர்களாக
நம்பிப் புரிந்து செயல்பட்டிட
சாதிமதங்களும் அரசியல்
கழகப் பிரிவுகளும் மறையணும்
உன்ஞல் இதற்குழைக்க முடியும்.

கவிதையைப் புலம்பலாக்கிக்
கருத்தையும் காலத்தையும்
கடலில் கரைத்த உப்பாக்காதே.
உடலில் ஓடும் உணர்வெல்லாம்
சிரிக்கவே! பிறரைச் சிரிக்க வைக்கவே!
சிந்தித்திடு இளங் கவிஞனே!
இனத்தின் மறுமலர்ச்சிக் கவிஞுகிடு!
இலக்கியத் தென்றலாக மாறிடு!
மொழிப்பற்றும் இன ஒற்றுமையும்
உரிமைப் போர்ப் புயலாகிடும்.
விருப்பாற்றலை நெருப்பாக்கி
வறியவர்க்கு விருந்து சமைத்திடு.
காட்டாற்று வெள்ளமாக
உன் கற்பனையும் கனவும்
ஓடி மறைய வேண்டாம்.
நாடி வரும் அறிவுரையை
நொடிப் பொழுதாவது சிந்தித்திடு!

மாணவ மணியே! மைந்தனே!
நல்ல தமிழ் நெஞ்சமே!
அரச வீணைகள் இசையால்
தூய தமிழ் பாடியுள்ளமை
தமிழின் தவப் பயனே!
புதுமைக்கவி ச.கணேசன்
25, மாகாளியம்மன் கோயில் தெரு
எர்ணாவூர், சென்னை-51
என்ற முகவரி எங்கும்
தெரிந்த முகவரியாகிப் பொங்கும்
கவிதைக் கடலாகிடு நீ!
புதுமைக் குயிலே! புரட்சிப் புயலே!
வெறுமை வேண்டாம்;

வறுமை வேண்டாம்;
சீறும் வேங்கையாகி விடு!
சிங்கத்தின் முழக்கமாகட்டும்
உன் கவிதை!

அறியாமை இருளகற்றும்
ஆதவனாகட்டும் உன் கவிதை.
புவி வாழ்வோரும் புவியாள்வோரும்
நல்வழிப்பட எழுதிய கவிதை
புலம்பலாய் அவலச் சுவையாய்
ஒப்பாரியாய் கண்ணீராய்
வீணாக வேண்டாம் உன்னாற்றல்.
உனை நினைத்தே யாம்
புனைந்தோம் இப்புதுக் கவிதை.
வினையாற்ற வா வீரனே!
விரிவாக நேரில் உரையாடுவோம்
இனமானம் பேணுவோம்
மொழியுரிமை காப்போம்
பண்பாட்டு விடுதலை காண்போம்
அனைத்தும் அன்புவழியிலே
அமைதி வழியிலே அறவழியிலே
அருள்வழியிலேதான்.

**இந்துமதத் தந்தை**
**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம் குருதேவர் கைப்பட எழுதிய பிறதியாகக் கிடைத்தது. இந்தப் பிறதி கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புக்களில் இருந்தது.//**

# இ.ம.இ.யின் வளவளர்ச்சிக்காக

**ஆசிரியர்: இ.ம.இ.யின் 2வது தலைவர் சித்தர் காகபுசுண்டர் எனப்படும் ம. பழநிச்சாமிப் பிள்ளை**

## இந்து மதத்தைப் பற்றிய பேருண்மைகளில் சில - II

1. இந்தத் தலைப்பிலே யாம் அவசர அவசியமாக பல கட்டுரைகளை 1957 முதல் எழுதவாரம்பித்துள்ளோம். இதற்குக் காரணம் இதுவரை இம்மண்ணுலகில் யாருமே செய்யாத அரசயோகத்தைச் செய்து முடித்து எமது மகன், தமிழினத்திற்கே உரிய சாபக் கேட்டாலோ, அல்லது இந்துமதத்திற்கு ஏற்பட்டிட்ட கெட்டகாலம் இன்னும் நீங்காமையாலோ அல்லது பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கே உரிய தன்னிச்சையான காட்டாற்றுப் போக்கின் படியாலோ எம்மை விட்டுவிட்டு உலகம் சுற்றச் சென்று விட்டான். எனவே, யாம், எமது மாமனூர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களிடம் கற்றவைகளையும், கேட்டவைகளையும்; அவர் வழியாகப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்காக சந்தித்தவர்களையும்; ஏடுகளில் படித்தவைகளையும்; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய எமது மகனோடு [எட்டாவது மகன்] அரசயோகம் செய்தபோது பயின்றவைகளையும், செய்தவைகளையும், படித்தவைகளையும், சந்தித்தவர்களிடம் கேட்டுத் தெரிந்தவைகளையும், ..... அறிவுலகிற்காக அல்லது ஆராய்ச்சி உலகிற்காக அல்லது உலக அருளாளர்களுக்காக அல்லது இந்துமத வளவளர்ச்சிக்காக வெளிப்படுத்தப்பட்டே ஆக வேண்டும் என்று நினைக்கின்றோம், விரும்புகின்றோம். எனவேதான், இப்படித் தனித்தனிக் கருத்துக்களின் தொகுப்பாக அல்லது சிறுசிறு விளக்கமாக கட்டுரைகளை எழுத ஆரம்பித்துள்ளோம். இவையெல்லாம் அச்சேறி நூல்வடிவில் வெளியே வராவிட்டாலும், **'அருளாட்சி நாயகமாக'** செயல்பட வேண்டிய

எமது மகனுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் பயன்படட்டும் என்பதே எமது நோக்கம்.

2. பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தம் காலத்தில் இந்து மதத்திலிருந்த குளறுபடிகளும், குழப்பங்களும், திரிபுகளும், இடைச் செருகல்களும், வேதமதத்தின் ஆட்சிகளும் ...... இந்துமதத்தை அகற்றவியலாத காரிருளுக்குள் ஆழ்த்தி விட்டன என்று குறிக்கின்றார். அதனால், அவர் **'இந்துமதத்தில் அகற்றவியலா காரிருள்'** என்று தலைப்பிட்டே நிறைய எழுதினார். அதைப் பின்பற்றியே பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் குருபாரம்பரியத்தில், **"தமிழினத்தில் அகற்றவியலாக் காரிருள்"** என்ற தலைப்பிலும், இலக்கிய பாரம்பரியத்தில் **'தமிழ்மொழியில் அகற்றவியலாக் காரிருள்'** என்ற தலைப்பிலும், அரச பாரம்பரியத்தில், **'தமிழகத்தில் அகற்றவியலாக் காரிருள்'** என்ற தலைப்பிலும் ஏராளமாக எழுதினார். ஐந்தாவது தமிழ்ச் சங்கம் என்று சொல்லக் கூடிய இன்றைய சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம் மோகனூரில் இருந்த தமிழ்ச் சங்கத்தில் இவ்விருவரும் தமிழ் மொழி, இனம், நாடு என்ற மூன்றிலும் எப்படியெப்படி இருள் சூழ்ந்தது? அதை எப்படியெப்படி அகற்ற வேண்டும்? என்ற தலைப்பில் எழுதியனவற்றின் அடிப்படையில் தொடர் விரிவுரைகளும், ஆங்காங்கே கருத்துப் பரிமாற்றங்களும், ...... தொடர்ந்து நிகழ்ந்திட ஏற்பாடுகளைச் செய்தது. எனவே, அச்சங்கத்தை நடத்திய மோகனூர் உருத்திரம் பிள்ளை அவர்களின் மூன்றாவது மகனான எமது மாமனார் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் சில நூற்றாண்டுக் காலம் வாழ்ந்து செய்த போதனைகளையும், சாதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு யாம் இந்தக் கட்டுரைகளை எழுதப் புகுந்துள்ளோம். அதாவது, 'யாம் மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்து விடப் போகின்றோம்' என்ற நினைப்பிலோ, மிகப்பெரிய புகழும் பொருளும் பெற்றுவிடப் போகின்றோம் என்ற நினைப்பிலோ, ......... இவற்றையெல்லாம் யாம் எழுதப் புகவில்லை. யாமறிந்த செய்திகளை வெளியிடாமல் சென்றுவிடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் எழுதப் புகுந்திருக்கின்றோம். மேலும், யாம் உருவாக்கிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி யாம்

எதிர்பார்ப்பது போல் முறையாகவும், நிறையாகவும் தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் தொண்டாற்றுமல் மிகுதியாகக் காடுகளிலும், மலைகளிலும் தம் வாழ்நாட்களைக் கழித்திடுவாரோ என்று அஞ்சுகின்றோம் யாம்.

3. இந்துமதத்தவர்கள்தான் தங்களுடைய மதத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருக்கின்றனர்கள். இன்னும் சொல்லப் போனால் இந்துமதத்தை மறப்பவர்களும், பழிப்பவர்களும், இழிப்பவர்களும், அழிப்பவர்களும், ...... மிகுதியாக இருக்கின்றனர்கள். இந்துமதத்துக்கு விநோதமாக, வியக்கத் தக்க எவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஓர் அரிய ஆற்றல் உண்டு. இந்த அரிய ஆற்றலால்தான் நான்கு யுகங்களாகியும் இந்த இந்துமதம் மட்டும் இறவாமையையும் (Immortality), மக்கள் மறவாமையையும் பெற்று நிற்கின்றது. இதற்கு, மற்றொரு காரணமும் உண்டு; அதாவது மனித உணர்வோட்டங்களும், கருத்தோட்டங்களும், கற்பனையோட்டங்களும் எந்த அளவு உயரிய, நெடிய, தொலைதூர எல்லைக்குச் செல்ல முடியும் என்றாலும் சரி; அந்த அளவையும் கடந்து விஞ்ஞானப் பூர்வமாக [scientifically], மெய்ஞ்ஞானப் பூர்வமாக [religiously or spritually], பகுத்தறிவுப் பூர்வமாக [rationalistically], முறையான முழுமையான [a systematically and completely or properly] வளர்ச்சி நிலைகளைப் பெற்றிருக்கின்றது இந்துமதம். இந்த மண்ணுலகத்தைப் பொறுத்தவரை அரசாங்கப் பூர்வமாக இந்த இந்துமதத்தை அறிவித்து 50 இலட்சம் ஆண்டுகள்தான் ஆகியிருக்கின்றது. ஆனால், இந்த இந்துமதம் இம்மண்ணுலகில் அறிமுகப்படுத்தப்பட்ட காலமோ இதுபோல ஒரு மடங்கு காலத்துக்கும் மேலே இருக்கும். அதாவது, இம்மண்ணுலகில் பயிரினங்களும் உயிரினங்களும் அறிமுகப்படுத்தப் பட்ட காலத்துக்கு முன்பிருந்தே அண்டபேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் பல நூறாயிரம் கோடி ஆண்டுகளாக அண்டபேரண்டத்தையாளும் தங்களுடைய மதமான இந்து மதத்தை இம்மண்ணுலகில் பரப்ப முயன்றனர்கள். ஆனால், சுமார் ஐம்பது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான் இந்துமதத்துக்கென ஓர் அருட்பேரரசு இளமுறியாக் கண்டத்துத் தொன்மதுரையில் உருவாக்கப்பட்டு இந்துமதமும் அரசாங்கப் பூர்வமாக மக்களுக்கு வழங்கப்பட்டது. இப்படி இந்துமதம்

கணக்கற்ற கோடியாண்டுகளாக வளர்க்கப்பட்ட ஒன்று என்பதால்தான் இந்துமதம் எல்லா நிலைகளிலும் முழுமையாயிருக்கின்றது. ஆனால், இது கணக்கற்ற கோடியாண்டு பழமையென்பதால் இதனுடைய எல்லா நிலைகளையும், அதாவது இந்துமதத்தின் புராண இதிகாசங்களும், சாத்திற தோத்திறங்களும், பிற இலக்கியங்களும், வரலாறுகளும், சம்பிறதாயங்களும், பழக்க வழக்கங்களும், பூசைமுறைகளும், கடவுள்களின் நிலைகளும், தோற்றங்களும், வாழ்வியல்களும், ...... எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாதவைகளாக இருக்கின்றன. இதை எண்ணிப் பார்க்க முடியாதவர்கள்தான் இந்த இந்துமதத்தை மறுப்பவர்களாக, மறப்பவர்களாக, எதிர்ப்பவர்களாக, நகைப்பவர்களாக, இழிப்பவர்களாக, அழிப்பவர்களாக ...... மாறுகின்றார்கள். எனவேதான், காலங்கள் தோறும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி இந்துமதத்தில் கவிழ்ந்திடக் கூடிய காரிருளையெல்லாம் அகற்றும் பணியில் ஈடுபடுகின்றார்கள்.

4. இப்பொழுது நல்ல காலமாக பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றியுள்ளதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ‘இந்து மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் பல நிறுவனங்களும், நிர்வாகங்களும், எண்ணற்ற தனிமனிதர்களும், ...... போதுமான அளவு நூல்களும் தோன்றிவிட்டன, அல்லது தோற்றுவிக்கப் பட்டுவிட்டன’. அவையெல்லாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாலும் அவரைச் சார்ந்தவர்களாலும் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான், அவர் எம்மைப் பிரிந்து முயற்சிக் காலப் பணிகளில் ஈடுபட்டுள்ள இந்த நேரத்தில் இந்துமத இருளை அகற்றக் கூடிய செய்திகளையும், கருத்துக்களையும், சிறுசிறு குறிப்புக்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதிடுகின்றோம்.

5. பொதுவாக, இந்து மதத்திலுள்ள கடவுள்களின் வடிவங்களில் பிற உயிரினங்களின் உடல் உறுப்புக்களும், மனித உடல் உறுப்புக்களும் கலந்த புதிய வடிவங்களே நிறைய இருக்கின்றன. இதற்குக் காரணம், அண்டபேரண்டங்களின் அறுவை மருத்துவ வளர்ச்சிதான். அதாவது, இம்மண்ணுலகில் இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், அவர்களோடு வந்த பல்வேறு வகைப்பட்ட

அண்ட பேரண்டத்தவர்களும் இம்மண்ணுலகத்து உயிரினங்களிடையே எண்ணற்ற அறுவை மருத்துவங்களைச் செய்து புதிய புதிய வடிவங்களையுடைய உயிரினங்களைத் தோற்றுவித்தார்கள். இதே போல் உயிரினங்களுக்கிடையே இனக் கலப்பு உறவு முறையிலும், விந்துக்களையும் நாதங்களையும் பல்வேறு விகிதங்களில் கலந்து செயற்கைக் கருத்தரிப்பு முறைகளிலும் செயல்பட்டுப் பல்வேறு புதிய புதிய வடிவங்களோடு உயிரினங்களை உருவாக்கினுர்கள். இப்படி உண்டாக்கப்பட்ட உயிரினங்களுக்கு இந்துமதத்தின் மூலம் முதன்மையையும், அருளாற்றலையும் கொடுத்தார்கள். எனவேதான், அறிவியல் பூர்வமாகத் தாங்கள் உருவாக்கிய புதிய புதிய உயிரினங்களைப் பற்றிய வரலாறுகளையும், பயன்களையும் பற்றிய பேருண்மைகளையும் வெளியிடாமல் போய்விட்டார்கள். அதனுல்தான் இந்தியாவுக்கு வந்திட்ட வேதமதத்தவர்கள் தங்களுடைய விருப்பம் போல் பொருளற்ற கற்பனுவாதக் கதைகளையும், கருத்துக்களையும், செய்திகளையும், புராண இதிகாசங்களையும் ........ உருவாக்கிட்டார்கள். அவற்ருல்தான், இந்துமதம் அகற்ற முடியாத இருளைப் பெற்றிட்டது. எனவே, வேதமதத்திற்கு என்னென்ன விளக்கங்களைத் தரவேண்டுமோ, அவற்றையெல்லாம் காலக் கணக்கீட்டு அடிப்படையில் வரலாற்றுப் பூர்வமாகவும், இலக்கியப் பூர்வமாகவும், விஞ்ஞானப் பூர்வமாகவும் வழங்குகின்ற பணிதான் இந்துமதத்தின் காரிருளை அகற்றிடும், அகற்றிடும், அகற்றிடும். அம்முயற்சி பத்தாவது, பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் துவக்கப் பட்டிட்ட போதிலும் அவை நிறைவேற வேண்டியது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில்தான். எனவேதான், யாம், எமது படைப்புக்களைப் பலவகையிலும் இந்துமதத்தில் படிந்துள்ள காரிருளை அகற்றுவதற்கு உதவும் வண்ணமாக உருவாக்கி வருகின்றேம். எனவே, எல்லோரும் எமது படைப்புக்களைத் தேடிப் பிடித்தாவது படித்தறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துக் கொள்கின்றேம்.

***நகல் நல்குபவர்:*** அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, தருகுலக் காப்பாளர், சேரப் பெருமண்டலப் படியெடுக்கும் நாயகம், சித்தரடியார் சீ.மணி

# உங்களின் சிந்தனைக்கு ...

"... இன்றைக்கு குமரி முதல் இமயம் வரை இருக்கின்ற இந்துக்களிடையிலே இந்துமதம் என்று சொன்னால், சமசுகிருத மொழியிலே இருக்கக் கூடிய ஒன்று என்று நினைக்கிறார்கள். சமசுகிருத மொழியிலே இருக்கக் கூடிய நான்கு வேதங்கள், இந்துமதம் என்று நினைக்கிறார்கள். அப்படி இருக்குமேயானால் அந்த வேதங்களுக்கு இந்து வேதங்கள் என்று பெயர் வந்திருக்கும். ரிக், யஜீர், சாமம், அதர்வனம் என்று நான்கு வேதங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நான்கு வேதங்களுக்கு இந்து வேதம் என்று பெயர் இருக்கிறதா? இல்லை. அந்த நான்கு வேதங்களிலும் இந்து என்கிற சொல் இருக்கிறதா? இந்துக்கள் என்ற சொல் இருக்கிறதா? இந்து நாடு என்ற சொல் இருக்கா? என்று பார்த்தால் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! பிறகு எப்படி இந்த நான்கு வேதங்களையும் இந்து வேதம் என்று ஏற்றுக் கொள்ள முடியும்!? ..."


## இந்து இலக்கியக் கழகத்தின் பிற வெளியீடுகளையும் வாங்கிப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1) | மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி | ரூ.108/- |
| 2) | இந்துவேதம் தரும் பூசைமொழி, பூசைமுறைகள் | ரூ. 5/- |
| 3) | எந்த மானுடம் இந்த மானுடம் | ரூ.18/- |
| 4) | சிந்திக்கலாமா? | ரூ.36/- |
| 5) | இருக்கு வேதத்தில் பெருமால் காயந்திரிகள் | ரூ.50/- |

## இவ்வெளியீடுகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1) சித்தரடியான் திரு கார்த்திக் சிவராமன், கிழக்கு தாம்பரம், சென்னை, 9972130609
2) சித்தரடியான் திரு வீரபாண்டி, மதுரை, 9994983391
3) சித்தரடியான் திரு சங்கிலி கருப்பசாமி, திருச்சுழி 9655017508
4) சித்தரடியான் திரு மோகனரங்கம், திருவொற்றியூர், சென்னை 9840670874
5) சித்தரடியான் திரு சந்திரன், புன்னப்பாக்கம், வெங்கல், 9943670235
6) சித்தரடியார் திரு இரமணா, ஆரணி, 9629450166

**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.**



**இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

---

**'இந்துமதம்' தமிழரின் மதமே!**
**தமிழ்மொழியே இந்துமதப் பூசைமொழி!**

**தமிழ்மொழியே கடவுள் மொழி, தெய்வ மொழி, தேவ மொழி, வேதமொழி!**



**அம்மையப்பர்**

---

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்)
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609
Printed at Kavin Printers, Madurai

**www.gurudevar.org** **Email: indhuism@gmail.com**